# பன்முகத்தன்மையோடு கூடிய இன நல்லிணக்கம்: அமைச்சர்

***Tamil Murasu***, 26th June 2021

சிங்கப்பூரில் இன நல்லிணக்கத்தை எட்ட, தங்களது கலாசாரத்தின் சில பகுதிகளைக் கைவிடுமாறு எந்த ஒரு சமூகமும் கேட்டுக்கொள்ளப்பட-வில்லை என்றும் மாறாக அவற்றின் பன்முகத்தன்மை தழுவிக்கொள்-ளப்பட்டது என்றும் நிதி அமைச்சர் லாரன்ஸ் வோங் தெரிவித்துள்ளார்.

கொள்கை ஆய்வுக் கழகமும் எஸ்.ராஜரத்தினம் அனைத்துலக ஆய்வுக் கழகமும் இணைந்து நேற்று ஏற்பாடு செய்திருந்த இனம் மற்றும் இன-வாதம் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் வோங், மற்ற நாடுகளைக் காட்டிலும் சிங்கப்பூரின் பல்லினக் கலாசா-ரம் தனித்துவமானது, வேறுபட்டது என்று குறிப்பிட்டார்.

பன்முகத்தன்மையை சிங்கப்பூர் குறைத்து மதிப்பிடாது என்று உறுதி-படக் கூறிய அவர், ஆனால் அதனை ஏற்றுக்கொண்டு, கொண்டாடி வரு-வதாகவும் சொன்னார்.

பல்லினச் சமுதாயம் என்பது மக்கள் கொண்டுள்ள தனிப்பட்ட அடை-யாளங்களை மறந்துவிடுவது எனப் பொருள்கொள்ளக்கூடாது என்றும் அதற்குக் கலாசார வேறுபாடுகளையும் வரலாறுகளையும் அழிக்கத் தேவையில்லை என்றும் அமைச்சர் வோங் கூறினார்.

“மாறாக, அது நமது மரபுடைமைகளைத் தழுவி, நம்மை இணைக்கவும் ஒருவருக்கொருவர் மதிப்புகொள்ளுமாறும் செய்கிறது; ஒரு தேசிய அடையாளத்தையும் பகிர்ந்த நோக்கத்தையும் உள்ளடக்குமாறு செய்-கிறது,” என்றார் அவர்.

பல்லினச் சமுதாயம் குறித்த தனது அணுகுமுறையில் சிங்கப்பூரின் இருமொழிக் கொள்கை முக்கியப் பங்காற்றுகிறது என்றும் வட்டார மொழிகள் கொண்டுள்ள மரபுகளை அறிந்துகொள்ள குழந்தைகளை அது அனுமதிக்கிறது என்றும் அவர் சொன்னார்.

வட்டார மொழிகளைக் காக்க பெருமுயற்சி எடுக்கப்பட்டு வருவதாக-வும் அவர் கூறினார். பள்ளிக் குழந்தைகள் தங்களது தாய்மொழிகளைக் கற்க வலியுறுத்துவது, வட்டார மொழிகளின் தரங்களைக் கட்டிக்காக்க வளங்களை ஒதுக்குவது, வட்டார மொழி ஊடகங்கள் நிலைத்திருக்க உதவுவது உள்ளிட்ட நடவடிக்கைகளை அவர் சுட்டிக்காட்டினார்.